


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 27.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- நியமனங்கள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- **நியாய விலைக் கடைகளில் அரிசி பெறும் அட்டைதாரர்கள்** அனைவருக்கும் **பொங்கல் பரிசுத் தொகுப்புடன்** தலா **ரூ.1,000 ரொக்கமாக வழங்கப்படும்** என்று கள்ளக்குறிச்சியில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

## தேசிய நிகழ்வுகள்

- இந்த ஆண்டில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது பிரதான் மந்திரி கிராமீன் சதக் யோஜனா (Pradhan Mantri Grameen Sadak Yojana – PMGSY) என்ற திட்டத்தின் கீழ் நாட்டில் மிக அதிகத் தொலைவு கொண்ட சாலை வசதிகளை ஏற்படுத்தி சாதனை படைத்து இருக்கின்றது.
  - இப்பகுதியானது இதுவரையில் 1,838 வாழ்விடங்களை உள்ளடக்கிய 11,400 கிலோ மீட்டர் சாலை வசதியைக் கொண்டிருக்கின்றது.
  - **செய்தி துளிகள்:**
    - **PMGSY என்பது நாட்டில் சாலை வசதியால் இணைக்கப்படாத கிராமங்களுக்கு சிறந்த, அனைத்து வானிலைகளையும் தாங்கக் கூடிய சாலை** இணைப்பை வழங்குவதற்காக **மத்திய அரசால்** தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
    - இது 2000 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமரான

ஏபி வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது.

- ஊழல் தடுப்பு அமைப்பான லோக்பால் குழுவின் சின்னம் (லோகோ) மற்றும் குறிக்கோள் வாசகம் செவ்வாய்க்கிழமை (26.11.2019) தேர்வு செய்யப்பட்டது.
    - தேசிய அளவில் அரசு அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் வழக்குகளை கையாளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு லோக்பால் குழு.
    - **லோக்பால் அமைப்பின் தலைவராக நீதிபதி பினாக்கி சந்திரகோஷ்** நியமிக்கப்பட்டு, மார்ச் 23-இல் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதன் தொடர்ச்சியாக லோக்பால் குழுவில் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு மார்ச் 27-இல் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
    - **செய்தி துளிகள்:**
        - இந்நிலையில், லோக்பால் குழுவுக்கு புதிய சின்னமும், வாசகமும் தேவைப்பட்ட நிலையில் இதுதொடர்பான திறந்தநிலை போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது.
        - ‘யாருடைய செல்வத்திற்கும் பேராசை கொள்ளாதீர்’ என்ற சமஸ்கிருத வாசகம் லோக்பாலுக்கான குறிக்கோளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- ஆபத்தான பிணந்தின்னிக் கழுகுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய படியாக, உத்தரபிரதேச அரசு **மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தின் ஃபரேண்டா பகுதியில்** மாநிலத்தின் முதல்

**பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தை அமைக்கும்.**

- **செய்தி துளிகள்:**
  - சுற்றுச்சூழல் அமைச்சரின் கூற்றுப்படி, நாட்டில் பிணந்தின்னிக் கழுகுகளின் எண்ணிக்கையில் கூர்மையான சரிவு ஏற்பட்டுள்ளது, இது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக 40 மில்லியனிலிருந்து 19,000 ஆக குறைந்துள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **பொருளாதார மற்றும் சமூக உள்ளடக்கம்** ஆகியவற்றின் அடிப்படையில், உலகில் உள்ள 113 நகரங்களில் இந்தியாவில் உள்ள **பெங்களுரு** நகரமானது நாட்டின் மிகவும் **முன்னணியில் உள்ள ஒரு தரவரிசைப்படுத்தப்பட்ட நகரமாக** (அந்நகரின் தரவரிசை 83) உருவெடுத்துள்ளது.
  - வளமை மற்றும் உள்ளடக்கல் நகர முத்திரை மற்றும் விருதுகள் (Prosperity & Inclusion City Seal and Awards – PICSA) குறியீடானது முதன்முறையாக பாஸ்க் நிறுவனங்கள் மற்றும் டி & எல் பங்காளர்கள் ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டது.
  - **செய்தி துளிகள்:**
    - இந்தப் பட்டியலில் ஜூரிச் (சுவிட்சர்லாந்து) முதலிடத்திலும் வியன்னா (ஆஸ்திரியா) இரண்டாவது இடத்திலும் கோபன்ஹேகன் (டென்மார்க்) மூன்றாவது

இடத்திலும் உள்ளன.

- இந்தப் பட்டியலில் தில்லி 101வது இடத்திலும் மும்பை 107 இடத்திலும் உள்ள மற்ற இந்திய நகரங்களாகும்.

## நியமனங்கள்

- **தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகப் புதிய துணைவேந்தராக பேராசிரியர் என்.பஞ்சநாதம்** நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான பன்வாரிலால் புரோஹித் செவ்வாய்க்கிழமை பிறப்பித்தார்.
  - **செய்தி துளிகள்:**
    - 2017-ஆம் ஆண்டில் மும்பை ஐஐடி - இந்திய கணினி சமூகத்தின் தலைசிறந்த பேராசிரியர் விருதையும் பஞ்சநாதம் பெற்றுள்ளார். 2018-ஆம் ஆண்டில் இந்திய சர்வதேச மேலாண்மை ஆராய்ச்சியாளர் சங்கத்தின் தலைசிறந்த மேலாண்மை ஆராய்ச்சி வழிகாட்டுநருக்கான விருதையும் இவர் பெற்றுள்ளார்.
    - இப்போது தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் இவர், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருப்பார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **இந்தியாவின் கார்டோசாட் செயற்கைக்கோள் மற்றும்**

**அமெரிக்காவின் 13 சிறிய ரக செயற்கைக்கோள்களைச் சுமந்தபடி பி.எஸ்.எல்.வி-சி47 ராக்கெட் புதன்கிழமை விண்ணில் பாய்கிறது.**

- ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து ராக்கெட் விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான 26 மணி நேர கவுன்ட்-டவுண் தொடங்கப்பட்டது.
- **செய்தி துளிகள்:**
    - 1,625 கிலோ எடை கொண்ட இந்த மூன்றாம் தலைமுறை அதிநவீன கார்டோசாட்-3 செயற்கைக்கோள், புவியிலிருந்து 509 கி.மீ. தொலைவிலான சுற்றுவட்டப் பாதையில் 97.5 கோணத்தில் நிலைநிறுத்தப்பட உள்ளது. அங்கிருந்தபடி, புவியைக் கண்காணிப்பதுடன் உயர் தரத்திலான புகைப்படத்தை எடுத்தனுப்பும் திறன் கொண்டது.
    - இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோளுடன் அமெரிக்காவுக்கு சொந்தமான 13 சிறிய ரக செயற்கைக்கோள்களையும் பி.எஸ்.எல்.வி. சி-47 ராக்கெட் சுமந்து செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 26 ஆம் தேதி டாக்டர் வெர்கீஸ் குரியனின் பிறந்த நாளில் தேசிய பால் தினம்** நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் இந்தியாவில் வெள்ளை புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியனின் பிறந்த நாளைக் குறிக்கிறது.

We Shine Academy™

இந்த ஆண்டு டாக்டர் குரியனின் 98 வது பிறந்த நாளை இந்தியா கொண்டாடப்படுகிறது.

## திருக்குறள்

**குறள் எண் : 30**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்.**

**விளக்கம் :** எல்லா உயிர்களிடத்தில் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

We Shine Academy ™